## 2.72 விசைப்பம்பு பராமரிப்பு – கோட்ட அளவில் உதவிப் பொறியாளர் மற்றும் மாவட்ட அளவில் உதவி செயற்பொறியாளர் ஆகிய பதவிகளை நீக்குதல்

ஊரக வளர்ச்சி (தி3) துறை

அரசாணை (நிலை) எண். 124 நாள் : 16.5.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.141, ஊரக வளர்ச்சி, நாள்.3.8.1995
2. அரசாணை (நிலை) எண்.84, ஊரக வளர்ச்சி, நாள்.5.5.1998
3. அரசாணை (2டி) எண்.149, ஊரக வளர்ச்சி, நாள்.9.7.99
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் நக.27094/ஈ1/99, நாள்.6.4.2000.
5. அரசாணை (நிலை) எண்.121, ஊரக வளர்ச்சி, நாள்.10.5.2000.

**ஆணை**

படிக்கப்பட்டவை மூன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையில், கிராம ஊராட்சிகளின் பணியமைப்பை அவைகளின் நிதிநிலைக்கு ஏற்ப சீரமைத்து, செயல்பாட்டை மேம்படுத்துவது குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க, அலுவலர்கள் மற்றும் அலுவலர்களல்லாதவர்களைக் கொண்ட குழு ஒன்று ஏற்படுத்தி ஆணையிடப்பட்டது. ஊராட்சிகள் சட்டம், 1994–ன்படி அமலுக்கு வந்துள்ள மூன்றடுக்கு ஊராட்சிகள் நிர்வாக அமைப்பில், கிராம குடிநீர் திட்ட கைப்பம்பு / விசைபம்புகளை பராமரிக்கும் பொறுப்பு கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்பணிகளை கிராம ஊராட்சிகள், உள்ளூரில் உள்ள பயிற்சி தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மூலமாக செய்வதற்கான நெறிமுறைகள், படிக்கப்பட்டவை இரண்டில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டன. எனவே, ஏற்கனவே பணியாற்றிவரும் கிராம குடிநீர் பராமரிப்பு பணியாளர்களை, எவ்வகையில் கிராம ஊராட்சிகளால் கைபம்பு / விசைப்பம்பு பராமரிக்கப்படும் பணிகளில் பயன்படுத்தலாம் என்பது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைக்குமாறும் மேற்குறிப்பிட்ட குழு கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட குழுவின் பரிந்துரை எண்.4–ன் அடிப்படையில் ஊராட்சி ஒன்றிய அளவில் கிராம குடிநீர் கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பு பணியாளர்களைக் கொண்ட தொழில்நுட்ப சேவைக்குழுவும் 'சுழல் நிதியும்' அமைக்க படிக்கப்பட்டவை ஐந்தில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளது.

3. கிராம குடிநீர் பராமரிப்பு தொடர்பாக தற்பொழுது கோட்ட அளவில் உள்ள உதவிப் பொறியாளர் (வி.ப.பரா.) மற்றும் மாவட்ட அளவில் உள்ள உதவி செயற் பொறியாளர் (வி.ப.பரா.) பணியிடங்களைப் பொறுத்தவரை குழு கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்துள்ளது:–

பரிந்துரை எண்.5:

கோட்ட அளவில் உதவிப் பொறியாளர்கள் (குவ) மாவட்ட அளவில் உதவி செயற் பொறியாளர்கள் இதுவரை செய்து வந்த பணிகளான அளவு செய்தல், மேலளவு செய்தல் பட்டியல் மேலொப்பம் செய்தல், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான மாவட்ட கொள்முதல் குழுவிற்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல் போன்றவற்றை முறையே ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஒன்றிய பொறியாளர்கள், வட்டாரப் பொறியாளர்கள், கோட்ட அளவில் உதவி செயற் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) மாவட்ட அளவில் செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) ஆகியவர்களிடம் ஒப்படைத்து அரசு ஆணையிடலாமென இக்குழு பரிந்துரை செய்கிறது.

மேலும், ஒன்றிய அளவில் தொழில்நுட்ப சேவைக்குழு அமைக்கப்பட உள்ளதையும், இவர்கள் மேற்கொண்ட அனைத்து பணிகளையும் ஊரக வளர்ச்சித் துறையின் பொறியியல் துறை மேற்கொள்ளும் சூழ்நிலையினை கருத்திற்கொள்ளும்போது, கோட்ட அளவில் உதவி பொறியாளர் (குவ), மாவட்ட அளவில் உதவி செயற்பொறியாளர் (குவ) ஆகிய பணியிடங்கள் அவசியம் இல்லாமற் போகிறது. எனவே இப்பணியிடங்களை நீக்கிவிடவும் இக்குழு பரிந்துரை செய்கிறது.

4. இந்தப் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்தது. குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதுபோல், மூன்றடுக்கு ஊராட்சி நிர்வாக முறையில், கிராம குடிநீர் பராமரிப்பு கிராம ஊராட்சிகளின் பொறுப்பு என்பதாலும், அதற்கு கிராம ஊராட்சியில் விசைப்பம்பு / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களும் ஊராட்சி ஒன்றிய அளவில் பொருத்துநர், மின்பணியாளர்களைக் கொண்ட தொழில்நுட்ப சேவைக்குழு அமைக்க (குழுவின் பரிந்துரை 4–ன்படி) ஆணையிடப்பட்டுள்ளதாலும், ஊரக வளர்ச்சித் துறைக்கென ஏற்பனவே தனியாக பொறியியல் பிரிவு ஏற்படுத்துப்பட்டு ஒன்றிய அளவில் கூடுதல் ஒன்றிய பொறியாளர், கோட்ட அளவில் உதவி செயற் பொறியாளர் (ஊ.வ.) மற்றும் மாவட்ட

அளவில் செயற்பொறியாளர் (ஊ.வ.) ஆகியோர் உள்ளதால், அவர்கள் கிராம ஊராட்சிகளுக்கும், தொழில்நுட்ப சேவைக் குழுவுக்கும் கைப்பம்பு / விசைப்பம்பு பராமரிப்பு தொடர்பான உதவிகளைச் செய்ய இயலும் என்பதாலும், தனியாக கோட்ட அளவில் உதவிப் பொறியாளர் (வி.ப.பரா.) மற்றும் மாவட்ட அளவில் உதவி செயற்பொறியாளர் (வி.ப.பரா.) பணியிடங்கள் தேவையில்லை, எனவே குழுவின் பரிந்துரைகளை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது.

5. மேற்கொண்ட முடிவின் அடிப்படையில், அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகின்றது –

அ) 1995–க்கு முன்பிருந்த கிராம குடிநீர் பராமரிப்பு முறையின்படி ஏற்படுத்தப்பட்டு தற்பொழுதுள்ள பராமரிப்பு முறைப்படி தேவையில்லாமல் கோட்ட அளவில் உள்ள உதவிப் பொறியாளர் (வி.ப.பரா.) பணியிடங்களும் மாவட்ட அளவில் உள்ள உதவி செயற் பொறியாளர் (வி.ப.பரா.) பணியிடங்களும் நீக்கம் செய்யப்படுகின்றன. அப்பொறியாளர்களை அவர்களின் தாய் துறைக்கு திருப்பி அனுப்புமாறும் அரசு ஆணையிடுகின்றது. அப்பொறியாளர்களுக்கு உதவியாக அனுமதிக்கப்பட்ட இதர பணியிடங்களை தொடர வேண்டிய அவசியம் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

ஆ) கோட்ட அளவில் உதவி பொறியாளர் (வி.ப.பரா.), மாவட்ட அளவில் உதவி செயற் பொறியாளர் (வி.ப.பரா.) ஆகியோர் செய்து வந்த பணிகளை, இனிமேல் ஒன்றிய அளவில் உள்ள ஒன்றியப் பொறியாளர் / வட்டார பொறியாளர், கோட்ட அளவில் உள்ள உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) மற்றும் மாவட்ட அளவில் உள்ள செயற்பொறியாளர் (ஊ.வ.) ஆகியோர் செய்யவும் ஆணையிடப்படுகின்றது.

6. இந்த அரசாணையின் நகலை அனைத்து கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும், உதவி இயக்குநர்களுக்கும், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் உடனடியாக அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.1370/FS/P/2000, இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்